# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**<u>ஆணை நாள்: 10.11.2020</u>**

<u>முன்னிலை</u>

## திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

…………

**<u>வழக்கு எண். NC998/F/2019 (SA8019/F/2018 & SA8023/F/2018)</u>**

**திரு. S. ஜாகீர் உசேன்** … **மேல்முறையீட்டாளர்**

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்/மேற்பார்வை பொறியாளர்
மின் தொடரமைப்பு-1, மின் தொடரமைப்பு அலுவலகம்
தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்,
6வது தளம், மேற்கு பகுதி, ந.பு.கே.ஆர்.ரா மாளிகை,
எண்.144, அண்ணா சாலை, சென்னை - 600 002.

பொதுத் தகவல் அலுவலர்/ மேற்பார்வை பொறியாளர்/
பொது கட்டுமான கட்டம், மின் தொடரமைப்பு,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
டாடாபாத், கோயம்புத்தூர். … **பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **24.09.2018** |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | **06.10.2018** |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | **29.10.2018** |
| ஆணையத்தின் ஆணை நாள் | **27.02.2019** |
| ஆணை பெறப்படாத மனு நாள் | **06.05.2019** |

******

## <u>ஆணை</u>

இவ்வழக்கு ஏற்கனவே 27.02.2019 நாளிட்ட ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை இனம் 2 மற்றும் 7க்கு உரிய தகவலை 7 தினங்களுக்குள் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத

காரணத்தால் இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு S. ஜாகீர் உசேன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம், 6வது தளம், மேற்குபகுதி, எண் 144, அண்ணா சாலை, சென்னை மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 24.09.2018 தேதியிட்டு இரண்டு மனுக்கள் தாக்கல் செய்து ஒரே பொருள் கொண்ட தகவல் கேட்டுள்ளதாலும், ஒரே பொதுத் தகவல் அலுவலர் தொடர்புடைய தகவல் என்பதாலும் அந்த இருமனுக்களும் ஒருங்கே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அம்மனுக்களில், திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், வேட்டுவபாளையம் வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட வேட்டுவபாளையம் கிராமம் க.ச.501ல் மேல்முறையீட்டாளரது மனைவிக்கு 1.40 ஏக்கர் நிலம் உள்ளதாகவும், அரசூர்-கோபி 400/230 மின் பாதையை அங்கீகரிக்கப்பட்ட மின் தடமான அ.குரும்பபாளையம் குக்கிராமம் வழியே கொண்டு செல்லாமல், மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான மேற்குறிப்பிட்ட இடத்தில் அத்துமீறி மின் பாதை டவர் எண்.40 அமைத்தது தொடர்பாக சில தகவல் தேவைப்படுவதாகவும், அது தொடர்பாக 7 இனங்களில் தகவல் வழங்க கேட்டு, பொதுத் தகவல் அலுவலர் மற்றும் தலைமைப் பொறியாளர், சிவில் டிரான்ஸ்மிசன், 6வது தளம், NPKRR மாளிகை, அண்ணா சாலை, சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. 03.10.2018 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் சரியான தகவல் வழங்கவில்லை என தெரிவித்தும், சரியான முழுமையான தகவல் வழங்க கேட்டும், 06.10.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். முதல் மேல்முறையீட்டு அலுவலர் 15.10.2018 தேதியிட்டு, பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையே வழங்கியுள்ளார். மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லை என்றும், அவற்றை இலவசமாக அளிக்க உத்தரவு பிறப்பிக்கும்படியும் கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 29.10.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது 27.02.2019 அன்று விசாரணை மேற்கொண்டு **SA8019/F/2018 மற்றும் SA 8023/F/2018** ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 7 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 06.05.2019 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் தான் கோரிய தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையும் ஆணையம் பரிசீலனை செய்து கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கிறது:-

- **மேல்முறையீட்டாளருக்கு ஏறத்தாழ 2 வருட காலத்திற்கு மேலாக பதில் அளிக்காத அப்போதைய இரு பொதுத் தகவல் அலுவலர்களுக்கும் தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவர்களது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் பதிவுத் தபால் மூலம் ஆணையத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**
- மேல்முறையீட்டாளர் 24.09.2018 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளர் கோரும் ஆவண நகல்களை சான்றிட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 7(6)-ன்படி இலவசமாக வழங்குமாறும் பொதுத் தகவல் அலுவலருக்கு இதன்மூலம் ஆணையம் உத்தரவிடுகின்றது.**
- **மேல்முறையீட்டாளர் 24.09.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (ச.த. **தமிழ்குமார்)**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண். NC998/F/2019 (SA8019/F/2018 & SA8023/F/2018)</u>**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/ மேற்பார்வை பொறியாளர்,
மின் தொடரமைப்பு-1, மின் தொடரமைப்பு அலுவலகம்/
தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்,
6வது தளம், மேற்கு பகுதி, ந.பு.கே.ஆர்.ரா மாளிகை,
எண்.144, அண்ணா சாலை,
சென்னை - 600 002.

பொதுத் தகவல் அலுவலர்/ மேற்பார்வை பொறியாளர்/
பொது கட்டுமான கட்டம்,
மின் தொடரமைப்பு,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
டாடாபாத், கோயம்புத்தூர்.

<u>மேல்முறையீட்டாளர்</u>

**திரு. ஜாகீர் உசேன்,**
**அட்வகேட்,**
**168, கஸ்தூரிபாய் வீதி,**
**அவிநாசி - 641 654.**

Copy to: Judgement File/ Spare
JE/PA -19.11.2020